# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| MCOP No. 208/2020 | நாள் – 27.01.2025 | சாட்சி – ம.சா.2 |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. குமார் | தந்தை பெயர் | திரு. கலியமூர்த்தி |

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு நிலங்கள் எங்கு உள்ளது என்றால் திருப்பானந்தாள் வடக்கு தெருவில் உள்ளது. விபத்து எந்த தேதியில் நடந்தது என்றால் 11.09.2018 ஆகும். என்னை காவல்துறையினர் விபத்து சம்பந்தமாக விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி வந்தது என்றால் அணக்கரையில் இருந்து கும்பகோணம் நோக்கி வந்தது. விபத்தில் இறந்தவர் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி வந்தார் என்றால் திருப்பனந்தாளிலில் இருந்து அவருடைய ஊரான மட்டியூருக்கு தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்றார். எனது பிறந்த தேதி என்னவென்றால் 15.07.1971 ஆகும். டைரி எழுதும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. விபத்து நடந்த தேதியானது 11.09.2018 ஐ எவ்வாறு ஞாபகம் வைத்து சொல்கிறேன் என்றால் அடிப்பட்டவரை நான் மருத்துவமனையில் சேர்த்ததால் ஞாபகத்தில் உள்ளது. அடிப்பட்டு இறந்தவரின் மகன் பெயர் என்னவென்றால் அருள் ஆகும். அருள் எனக்கு எவ்வளவு நாள் பழக்கம்

என்றால் 10 – 15 வருடங்கள் பழக்கம். விபத்து நடந்த இடத்திற்கும் நான் நின்ற இடத்திற்கும் உள்ள தூரம் என்னவென்றால் 50 மீட்டர் இருக்கும். சத்தம் கேட்டுதான் திரும்பி பார்த்தேன் என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், விபத்தில் இறந்தவரின் மகன் அருள் எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு ஆதரவாக அவர்கள் சொல்லிக்கொடுத்தவாறு உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.01.27 17:54:42 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*